# வாக்குமூலம்

## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.

## OS.No. 40/2013

## வழக்கு சாட்சி DW.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **சாந்த சதீஸ்** | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : சாந்தகுணம் | கணவர் பெயர் | : ----- |
| கிராமம் | : கொடைக்கானல் | இனம் | : ஆண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 49/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 06.04.2026 |

**முதல் விசாரணை :**

நான் இவ்வழக்கில் 1ம் பிரதிவாதி ஆவேன். பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சி ஆவேன் . நான் இன்று தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் ஆகும். அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவையாகும். கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்கிறேன்.

1. 01.03.2002 தேதியிட்ட உயில் சாசனம் உண்மை நகல் **பி.வா.சா.ஆ.1** ஆகும்.

2. 25.07.2025 ல் நான் குப்புச்சாமிக்கு அனுப்பிய வேண்டுகோள் கடிதம் அலுவலக பிரதி **பி.வா.சா.ஆ.2** ஆகும்.

3. மேற்சொன்ன வேண்டுகோள் கடிதம் அனுப்பபட்டது தொடர்புடைய அஞ்சலக இரசீது அசல் **பி.வா.சா.ஆ.3** ஆகும்.

4. மேற்சொன்ன குப்புச்சாமி அவர்களுக்கு அனுப்பபட்ட கடிதம் அவர் இறந்துவிட்டதாக திருப்பபட்டது. அந்த அஞ்சல் கடிதம்**பி.வா.சா.ஆ.4** ஆகும்.

5. 25.07.2025 ல் நான் மனோகரனுக்கு அனுப்பிய வேண்டுகோள் கடிதம் அலுவலக பிரதி **பி.வா.சா.ஆ.5** ஆகும்.

6. மேற்சொன்ன வேண்டுகோள் கடிதம் அனுப்பபட்டது தொடர்புடைய அஞ்சலக இரசீது அசல் **பி.வா.சா.ஆ.6** ஆகும்.

7. மேற்சொன்ன கடிதத்தை மனோகரன் சார்பாக பகவதியம்மாள் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டை அசல் **பி.வா.சா.ஆ.7** ஆகும்.

8. ஸ்ரீ வைகுண்டம் சட்டமன்ற தொகுதி நிலை 216 ன் வாக்காளர் பட்டியல் பாகங்கள் 88, 89, 90, 91, 92, 93 ன் நகல்கள் **பி.வா.சா.ஆ.8** ஆகும்.

9. கண்ணியாகுமரி சட்டமன்ற தொகுதி நிலை 229 ன் வாக்காளர் பட்டியல் பாகங்கள் 227, 228, 229, 230, 231, 232, 233, 234, ன் நகல்கள் **பி.வா.சா.ஆ.9** ஆகும்.

( ஆவணங்கள் 1, 7, 8 மற்றும் 9 ஆகிய ஆவணங்கள் அசல் ஆவணங்கள் தொடர்புடைய அசல் ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்று ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு , ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது . பி.வா.சா.ஆ.8 மற்றும் பி .வா.சா.ஆ.9 க்கு பிரிவு 65 சாட்சிய சட்டத்தின் அடிப்படையில் முறையாக சான்றுடன் தாக்கல் செய்யப்படவில்லை என ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது )

## வாதி தரப்பு குறுக்கு விசாரணை:

எனக்கு தமிழ் எழுத வராது , படிக்கத்தெரியும், ஆங்கிலம் எழுதப்படிக்கத் தெரியும். எனது அப்பாவின் அப்பா பெயர் நடராஜன் நடார் என்றால் சரிதான். நடராஜனின் நாடாரின் சகோதரர் பெயர் கண்ணையா நாடார் என்றால் இருக்கலாம். கண்ணையா நாடாரை அருணாச்சல நாடார் என்று அழைப்பார்கள் என்றால் சரிதான் . அருணாச்சல நாடாருக்கு எத்தனை குழந்தைகள் என்று எனக்குத் தெரியாது . அருணாச்சல நாடாரின் குழந்தைகள் ஸ்ரீ வைகுண்டம் தாலுகா , உமரிக்காடு கிராமத்தில் வசித்து வருவதாகத் தெரியும். நான் B.B.A இளங்கலை படித்துள்ளேன்

என்றால் சரிதான். நான் 1976 ல் பிறந்தேன் என்றால் சரிதான் . எனது கல்லூரி மற்றும் பள்ளிப்படிப்பு அனைத்தும் கொடைக்கானல் மற்றும் தேனி மாவட்டத்தில்தான் படித்தேன் என்றால் சரிதான் . எனது தந்தை ஓய்வு பெற்ற அரசு ஊழியர் என்றால் சரிதான் . எனது தந்தை அவரது பணிக்காலத்தில் பணி நிமத்தமாக பல ஊர்களில் பணி மாறுதலுக்குள்ளாகி பணிபுரிந்தார் என்றால் சரிதான். நான் எனது கல்லூரி படிப்பை 2003 ல் முடித்தேன் என்றால் சரியல்ல , 1997 ல் முடித்தேன். எனது கல்லூரி படிப்பை முடித்து எனது தாயாருடன் கொடைக்கானலில் விவசாயம் செய்து வந்தேன். எனது தாயார் உயிருடன் இருக்கும்வரை விவசாயம் செய்து வந்தேன்.

எனது தரப்பில் இந்த வழக்கில் எதிர்வாதுரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்சொன்ன எதிர்வாதுரை தொடர்புடைய தகவலை நான் எனது வழக்கறிஞருக்கு சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். எதிர் வாதுரை தயார் செய்தபோது 2 ம் பிரதிவாதியான எனது மனைவி என்னுடன்தான் இருந்தார் என்றால் சரிதான் . எதிர்வாதுரை தயார் செய்தபோது எனது மனைவியுடன் ஆலோசித்துதான் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான் . நான் இந்த வழக்கின் வாதி மீது அசல் வழக்கு எண் . 49/2013 என்ற வழக்கு தொடுத்தேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வாதுரை மேற்சொன்ன அசல் வழக்கு எண்.49/2013 ல் தாக்கல் செய்த வாதுரை என்றால் சரிதான் . அந்த வாதுரையின் நகல் **வா.சா.ஆ.11** ஆகும். தற்போது எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எதிர்வாதுரையில் சொல்லப்படாத பல சங்கதிகள் எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் அதுகுறித்து எனக்குத் தெரியாது. நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூல சங்கதிகள் யார் சொல்லி எனது வழக்கறிஞர் தயார் செய்தார் என்றால் நான் சொல்லிதான் தயார் செய்தார்.

நான் எனது எதிர்வாதுரையில் சொல்லப்பட்ட சங்கதிகளின் அடிப்படையில் எனது நிரூபண வாக்குமூலம் தயார் செய்யப்படவில்லை என்றால் சரிதான். சுந்தர நாடாருக்கு பூர்விகம் ஸ்ரீவைகுண்டம், உமரிக்காடு என்றால் சரிதான் . சுந்தர நாடார் விவசாயம் செய்து வந்தார் . சுந்தர நாடாருக்கு மற்றொரு வேல்கண் நாடார் என்று எனது எதிர்வாதுரையில் எங்கும் சொல்லவில்லை என்றால் சரிதான் . சுந்தர நாடாருக்கு உமரிக்காட்டில் சொத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். உமரிக்காட்டில்

அவருக்கு வீடும் உள்ளது என்றால் சரிதான் . உமரிக்காட்டில் உள்ள சொத்தையும், வீட்டையும் சுந்தர நாடார் அவரது மகள் சாந்தா என்பவருக்கு உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் எனக்கு அதுகுறித்து தெரியாது . பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள சுந்தரம் என்பவரது கையெழுத்து போலியானது என்றால் சரியல்ல . பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் சுந்தரம் கையெழுத்து உள்ள இரண்டு இடங்களில் வேறுபட்டுள்ளது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணம் பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றால் அதுகுறித்து எனக்குத் தெரியவில்லை . என்னிடம் காட்டப்படும் ஆவணத்திற்கும், பி.வா.சா.ஆ.1 ஆவணத்திற்கும் உள்ள கையெழுத்திற்கும் வேறுபாடு உள்ளது என்றால் அதுகுறித்து எனக்குத் தெரியவில்லை. சுந்தர நாடாரின் மாதிரி கையொப்பதை காட்டும்பொருட்டு வேறு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை சுந்தர நாடார் தான் கையொப்பம் செய்தார் என்று காட்டக்கூடிய வேறு ஆவணங்கள் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை கைரேகை நிபுணருக்கு அனுப்ப தயாராக உள்ளேனா என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. சுந்தர நாடார் 14.09.2004 ம் தேதி பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணம் 23/பி3/2004 என்று எழுதி வைத்துள்ளார் என்றால் அதுகுறித்து எனக்குத் தெரியாது . மேற்சொன்ன உயில் ஆவணத்தை நான் இந்த நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த தயாராக உள்ளேனா என்றால் அதுகுறித்து எனக்குத் தெரியாது. மேற்சொன்ன உயில் ஆவணம் ஏரல் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அதுகுறித்து எனக்குத் தெரியாது. 14.09.2004 உயில் ஆவணத்தில் சுந்தர நாடார் வேல் கண் சுந்தரம் என்று கையொப்பம் செய்துள்ளார் என்றால் அதுகுறித்து எனக்குத் தெரியாது. மேற்சொன்ன விபரங்கள் நன்கு அறிந்துதான் சுந்தர நாடாரை வேல் கண் என்று அழைப்பார்கள் என்ற விபரத்தை நான் சாட்சியமாக அளித்துள்ளேன் என்றால் சரியல்ல . பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் அசலை நான் நேரில் பார்த்ததில்லை என்றால் சரிதான் . வா.சா.ஆ.11 ஆவணப்படி சுந்தர நாடாரின் மகள் சாந்தாவையும் பிரதிவாதியாக சேர்த்து வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான் . அசல் வழக்கு எண் .49/2013 வழக்கின் கீழ் வழக்கு தாக்கல் செய்ததது முதல் 2026 ல் சாந்தா இறக்கும் வரை அவருக்கு எங்கள் தரப்பில் முறையாக அழைப்பாணை அனுப்பவில்லை என்றால் சரியல்ல . வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் , சாந்தாவிற்கு அழைப்பாணை சார்வு செய்திருந்தால் பி.வா.சா.ஆ.1 ல் உள்ள கையெழுத்து போலி என்ற விபரம்

தெரிந்துவிடும் என்ற காரணத்தால் அழைப்பாணை அனுப்பப்படவில்லை என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.11 ஆவணத்தில் சுந்தர நாடாருக்கு ஆண் வாரிசு இல்லாத காரணத்தாலும், எங்கள் மீது கொண்ட அன்பினாலும், பாசத்தாலும் உயில் எழுதி வைத்ததாக எனது வாதுரையில் நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதே வாசகத்தை இந்த வழக்கின் எதிர்வாதுரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் . மேற்சொன்ன சங்கதிகளுக்கு முரண்பாடான சங்கதிகளை எனது நிரூபண வாக்குமூலம் பத்தி 3 ல் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல . சுந்தர நாடாருக்கு உடன் பிறந்த சகோதர, சகோதரிகள் இருக்கிறார்கள் என்றாலும் , அவர்களுக்கு ஆண் மற்றும் பெண் வாரிசுகள் உள்ளார்கள் என்றால் சரிதான் . அவர்கள் அனைவரும் ஒன்றாக கூட்டுகுடும்பமாக வாழ்ந்து வருகிறார்கள் என்றால் அதுகுறித்து எனக்குத் தெரியாது . மேற்சொன்ன காரணங்களால் சுந்தர நாடார் பி .வா.சா.ஆ.1 உயில் எழுதி வைக்க எந்த வித அடிப்படையும் இல்லை என்றால் சரியல்ல . இந்த வழக்கு தாவா சொத்து சுந்தர நாடார் இறப்புக்கு பின் அவரது ஒரே மகளான சாந்தாவின் பெயருக்கு பட்டா மாற்றம் ஏற்பட்டது என்றால் அதுகுறித்து எனக்குத் தெரியாது . நான் எப்போதாவது ஒருமுறை தான் உமரிக்காட்டிற்கு செல்வேன் என்றால் சரியல்ல.

சுந்தர நாடாரின் மகள் சாந்தா 2000 க்கு பிறகு கொடைக்கானலுக்கு வந்ததில்லை என்றால் அதுகுறித்து எனக்குத் தெரியாது . சாந்தா இறப்பதற்கு முன்பே 4 வருடங்களாக உடல்நிலை குன்றி இருந்தார் என்றால் அதுகுறித்து எனக்குத் தெரியாது . சுந்தர நாடாரின் மனைவி திருப்பதி எப்போது இறந்தார் என்றால் 2008 ல் இறந்தார் . திருப்பதியின் இறப்பிற்கு நான் சென்றேனா என்றால் இல்லை . சுந்தர நாடார் என் மீது சிறப்பு அன்பு , பாசம் வைத்திருந்ததாக வழக்கிற்காக பொய்யான சங்கதிகளை சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல . சுந்தர நாடார் 2004 ல் இறந்துவிட்டார். சுந்தர நாடார் புற்றுநோயின் காரணமாக இறந்தார் என்றால் அதுகுறித்து எனக்குத் தெரியாது . பி.வா.சா.ஆ.1 எழுதப்பட்டதாக சொல்லப்படும் காலகட்டத்தில் சுந்தர நாடார் புற்று நோயால் பாதிக்கப்பட்டு வெளியூர் செல்லமுடியாத நிலையில் இருந்தார் என்றால் சரியல்ல . பி.வா.சா.ஆ.8 மற்றும் 9 ஆவணங்கள் எதற்காக தாக்கல் செய்யப்பட்டது என்றால் சாட்சிகளின் விபரம் தெரிந்துகொள்வதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த ஆவணங்களான பி.வா.சா.ஆ.8 மற்றும் 9 ல்

இரண்டு சாட்சிகளின் பெயர் விபரம் இல்லை என்றால் சரிதான் . பயனற்ற ஆவணத்தை பி .வா.சா.ஆ.8 மற்றும் 9 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்சொன்ன பி.வா.சா.ஆ.8 மற்றும் 9 ஆவணங்கள் எனது அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது , யார் என்று குறிப்பிட்டுத் தெரியாது. பி.வா.சா.ஆ.7 ஆவணப்படி அஞ்சலை மனோகரன் வாங்கவில்லை என்றால் சரிதான் . அந்த ஒப்புகை அட்டையில் கையெழுத்து செய்துள்ள நபருக்கும் , மனோகரனுக்கும் என்ன உறவு முறை என்ற விபரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான் . மனோகரனுக்கு பி .வா.சா.ஆ.7 தொடர்புடைய அஞ்சல் உறை சார்வு செய்யப்பட்டதாக கருத இயலாது என்றால் அதுகுறித்து எனக்குத் தெரியாது. பி.வா.சா.ஆ.9 ஆவணத்தில் மனோகரன் பெயர் எதுவும் இல்லை என்றால் சரிதான் . பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் கையொப்பம் செய்துள்ள மனோகரன் என்ற ஒரு நபர் இல்லை என்றால் சரியல்ல. மனோகரன் என்ற நபர் இருந்திருந்தால் பி .வா.சா.ஆ.9 ஆவணத்தில் அதுகுறித்து தெளிவு பெற்றிருக்கும் என்றால் அதுகுறித்து எனக்குத் தெரியாது.

பி.வா.சா.ஆ.7 அஞ்சல ஒப்புகை அட்டை எனக்கு திரும்ப பெற்றபின் மனோகரனை நேரில் சென்று பார்த்தேனா என்றால் இல்லை , ஆனால் முயற்சி செய்தேன். குப்புச்சாமி எப்போது இறந்தார் என்ற விபரம் எனக்குத் தெரியாது. குப்புச்சாமி என்ற ஒரு நபர் இருந்தார், எப்போது இறந்தார் என்ற விபரங்களை தெரிந்து கொள்ள நான் நடவடிக்கை எடுத்தேனா என்றால் நடவடிக்கை எடுத்தேன். உயில் பற்றி தகவல் தெரியவந்தவுடன் குப்புச்சாமி தொடர்பாக தெரிந்துகொள்ள நடவடிக்கை எடுத்தேன். பி.வா.சா.ஆ.1 உயில் பற்றி எப்போது தெரியவந்தது என்றால் 2011–2012 காலகட்டத்தில் எனக்குத் தெரியவந்தது . அப்போது முதலே குப்புச்சாமியையும் , மனோகரனையும் தேடி வந்தேன் என்றால் சரிதான் . மேற்சொன்ன இருவரையும் தற்போதுவரை கண்டுபிடிக்க முடியவில்லை என்றால் சரிதான்.

2011–2012 முதல் குப்புசாமியையும் , மனோகரனையும் தேடி வருவதாக எனது தரப்பு ஆவணமான பி .வா.சா.ஆ.2 மற்றும் 5 ல் நான் எங்கும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான் . ஆவணங்களை உற்பத்தி செய்யவேண்டும் என்ற காரணத்தால் பி .வா.சா.ஆ.2 மற்றும் 5 ஐ ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல . பிரதிவாதி தரப்பான எங்கள் தரப்பு சாட்சியம் அளிக்க இந்த அசல் வழக்கு நிலுவையில் இருந்த தருவாயில்தான் குப்புச்சாமிக்கும், மனோகரனுக்கும் தபால் அனுப்பப்பட்டது

என்றால் சரிதான். வாதி இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும் , ஆனால் வாதுரையை படித்துப்பார்த்தால் தான் சொல்ல முடியும். எனது மனைவியின் பெயரில் எழுதப்பட்டுள்ள கிரைய ஒப்பந்தத்தை இரத்து செய்யச்சொல்லி வழக்கு போடப்பட்டுள்ளது. இந்த வழக்கில் எனது மனைவி பெயரில் போடப்பட்ட கிரைய ஒப்பந்தத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை . மேற்சொன்ன எனது மனைவியின் பெயரில் உள்ள கிரைய ஒப்பந்தத்தை வாதி தரப்பில் வா .சா.ஆ.4 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆவணத்தில் பட்டா ஒன்று உள்ளது என்றால் சரிதான், அந்த பட்டாவை நான்தான் பெற்றேன். பட்டா பெயர் மாற்றம் செய்ய யார் மனு கொடுத்தது என்றால் நான் தான் மனு கொடுத்தேன்.

**(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது)**

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.04.06 15:41:34 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.